CC 450/2009 13.10.2025

**PW1-** அக்பர் த/பெ.அப்துல் ரஹிம்

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவம் நடந்தபோது எனது தந்தை டீ கடை வைத்திருந்தார் என்றால் சரிதான். வழக்கமாக எத்தனை மணிக்கு டீ கடையை திறப்பார் மற்றும் எத்தனை மணிக்கு டீ கடை மூடுவார் என்றால் காலை 04.00 மணிக்கு திறந்து இரவு 10.00 மணிக்கு மூடுவார், இடையில் எனது தந்தை வீட்டிற்கு சென்று வருவார் என்றால் மதியம் உணவு உண்பதற்கு மட்டும் வீட்டிற்கு வருவார். எங்கள் டீ கடைக்கு அருகே வேறு கடைகள் உள்ளதா என்றால் 18 வருடங்கள் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. வழக்கு சம்மந்தமாக விவரம் தெரியுமா என்றால் கொஞ்சம் ஞாபகம் உள்ளது. எனது தந்தை எதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்தபோது எங்கள் வீட்டை சுற்றி எத்தனை வீடுகள் இருந்தது என்றால் 5, 6 வீடுகள் இருந்தாது. எங்கள் வீட்டின் அருகே ஆறுமுகம் மகன் சுரேஷ் வீடு இருந்ததா என்றால் இருந்தது.